






REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06







## வெப்பம் குறித்து வெளியான அறிவிப்பு



வடக்கு, வடமத்திய, கிழக்கு மாகாணங்கள் மற்றும் குருநாகல் மற்றும் மொனராகலை மக்களுக்கு வளிமண்டலவியல் திணைக்களம் விசேட அறிவித்தல் ஒன்றை விடுத்துள்ளது. அதில் குறித்த மாகாணங்கள் மற்றும் மாவட்டங்களின் சில பகுதிகளில், வெப்பக் குறியீடு, அதாவது மனித உடலால் உணரப்படும் வெப்பம், எச்சரிக்கை மட்டத்தில் இருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, சப்ரகமுவ, மேல், மத்திய, வடமேல் மற்றும் வடமத்திய மாகாணங்களிலும் காலி, மாத்தறை மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களிலும் பல இடங்களில் பிற்பகலில் அல்லது இரவில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. நாட்டின் ஏனைய பிரதேசங்களில் பிரதானமாக சீரான வானிலை நிலவும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப்பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும். மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள்.

## 20ஆம் திகதிக்குள் நான்கு இலட்சம் சுற்றுலாப் பயணிகள்



எதிர்வரும் 20ம் திகதிக்குள் நான்கு இலட்சம் சுற்றுலா பயணிகள் என்ற இலக்கை எட்ட முடியும் என நம்புவதாக சுற்றுலா அபிவிருத்தி சபை தெரிவித்துள்ளது.

இந்த மாதத்தில் சுமார் 55,000 சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளதாக அதன் தலைவர் பிரியந்த பெர்னாண்டோ குறிப்பிட்டார். “சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரிப்பைக் காட்டுகிறது. கடந்த 16ம் திகதி நிலவரப்படி, இந்த மாதத்தில் மட்டும் சுமார் 55,000 சுற்றுலாப் பயணிகள் வந்துள்ளனர். அதன்படி, சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 400,000 ஐ நெருங்கியுள்ளது. இம்மாதம் 20 ஆம் திகதிக்கு முன்னர் 400,000 சுற்றுலாப் பயணிகளின் வருகை பதிவு செய்யப்படும் என நம்புகிறேன். இந்த மாதம் அதிகளவில் சுற்றுலா பயணிகள் இந்தியாவில் இருந்து வந்துள்ளனர். அடுத்து ரஷ்யாவில் இருந்து.

ஆனால் ஜனவரி முதல் இன்று வரை ரஷ்யாவில் இருந்து அதிகளவில் சுற்றுலாப் பயணிகள் வந்துள்ளனர். அடுத்து இந்தியாவில் இருந்து. சீனாவில் இருந்து நாங்கள் எதிர்பார்த்தது போல, சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை அவ்வளவாக அதிகரிக்கவில்லை. அடுத்த மாதத்தில் சீனாவிலிருந்து வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும் என்று நாங்கள் நம்புகிறோம்.

## திரிஷாவின் லேட்டஸ்ட் புகைப்படம்



மௌனம் பேசியதே, சாமி, கில்லி, திருப்பாச்சி, ஜி, ஆறு, குருவி, விண்ணைதாண்டி வருவாயா உள்ளிட்ட பல படங்களில் நடித்து தனக்கான ரசிகர்கள் பட்டாளத்தை உருவாக்கி கொண்டவர் திரிஷா. இவர் தற்போது மணிரத்னம் இயக்கத்தில் உருவாகியுள்ள பொன்னியின் செல்வன் -2 படத்தில் நடித்து முடித்துள்ளார். இப்படத்தின் புரொமோஷன் பணிகளில் திரிஷா உள்ளிட்ட படக்குழு தீவிரம் காட்டி வருகிறது. மேலும் லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில் விஜய் நடிப்பில் உருவாகி வரும் லியோ படத்தில் திரிஷா நடித்து வருகிறார்.

இந்நிலையில் திரிஷா சமூக வலைத்தளத்தில் பதிவிட்டிருக்கும் புகைப்படம் லைக்குகளை குவித்து வைரலாகி வருகிறது. நீல நிற உடையில் திரிஷா இருக்கும் புகைப்படத்தை ரசிகர்கள் பகிர்ந்து வர்ணித்து பதிவிட்டு வருகின்றனர்.

## ஐரோப்பாவில் இலங்கையர்களுக்கு தொழில் வாய்ப்பு




வெளிநாடுகள் பலவற்றில் இலங்கை தொழிலாளர்களுக்கு பாரிய அளவில் வேலை வாய்ப்புக்கள் உள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார். ஜப்பானில் தாதியர்களின் வேலை வாய்ப்புகள், இங்கிலாந்து, கனடா, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் ஹோட்டல் துறையில் வேலை வாய்ப்புகள், ஐரோப்பிய நாடுகளில் தாதியர் வேலை வாய்ப்புகள், சவுதி அரேபியாவில் கட்டுமானத் துறையில் இலங்கை தொழிலாளர்களுக்கு பாரிய அளவில் வேலை வாய்ப்புக்கள் உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று (18) காலை இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் மற்றும் தொழில் பயிற்சி அதிகார சபைக்கு இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடும் நிகழ்வில் கலந்து கொண்டு அமைச்சர் இதனை தெரிவித்தார். இந்த வேலைத் தேவையை பூர்த்தி செய்ய பயிற்சி பெற்ற தொழிலாளர்களை வழங்க முடியவில்லை என அமைச்சர் சுட்டிக்காட்டுகிறார். இந்த வேலை வாய்ப்புகளை பூர்த்தி செய்வதற்கு தேவையான பயிற்சி பெற்ற பணியாளர்களை உருவாக்க வேண்டும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

## இன்னும் பல பொருட்களின் இறக்குமதிக் கட்டுப்பாடு தளர்த்தப்படும்



மேலும் பல பொருட்களின் இறக்குமதி கட்டுப்பாடுகள் எதிர்காலத்தில் தளர்த்தப்படும் என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார். சுங்கத்தின் எதிர்பார்க்கப்படும் வருமான இலக்கை அடைவதற்கும் இது உதவும் என அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார். சுங்கத் துறையின் வருமான இலக்குகள் தொடர்பான மீளாய்வு கூட்டத்தின் பின்னர் நேற்று (18) ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். முதல் 03 மாதங்களுக்கு சுங்கத்திற்கு வழங்கப்பட்டுள்ள வருமான இலக்கு 270 பில்லியன் ரூபாவாகும்.

ஆனால் அந்த காலகட்டத்தில் கிடைத்த வருமானம் எதிர்பார்த்த வருமானத்தை விட 12% குறைவாகவே காட்டப்பட்டுள்ளது. 2021ல், 485 பொருட்களும், 2022ல் 750 பொருட்களும் இறக்குமதி கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டன. இதன்படி, இது தொடர்பான கட்டுப்பாடுகள் விரைவில் தளர்த்தப்படும் என்றும், மத்திய வங்கியின் பொருளாதார ஆய்வுத் திணைக்களம் வழங்கும் பரிந்துரைகளின் அடிப்படையில் உரிய முடிவுகள் எடுக்கப்படும் என்றும் இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## முத்தமிழ் அறிஞர் விபுலானந்தர் பிறந்த மண்ணில் இடம்பெற்ற இப்தார் நிகழ்வு



காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயம் ஏற்பாடு செய்த இப்தார் நிகழ்வு சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் தஸ்லிமா வஸீர் தலைமையில் காரியாலய கூட்ட மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் ரமழான் சிந்தனையை மௌலவி ஏ.எச்.எம். றியாஸத் நிகழ்த்தினார்.

தமிழ், முஸ்லிம், கிறிஸ்தவ மக்கள் ஒன்றித்து வாழும் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தர் பிறந்த மண்ணில் இன நல்லிணக்க நிகழ்வாக இடம்பெற்ற இந்நிகழ்வில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பிரதிப்பணிப்பாளர் வைத்தியர் எம்.பீ.எம். வாஜித் கலந்துகொண்டு சமூக நல்லிணக்கம், நோன்பின் மாண்புகள், நோன்பும் - சுகாதார நிலையும் பற்றி விளக்கமான உரை ஒன்றை நிகழ்த்தினார். மேலும் அதிதிகளாக மாளிகைக்காடு ஸாலிஹீன் ஜும்மா பள்ளிவாசல் தலைவர் ஏ.ஜெமீல் ஹாஜியார், காரைதீவு பிரதேச சபை செயலாளர், காரைதீவு பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர், சிவில் அமைப்புக்களின் பிரதானிகள், காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி காரியாலய உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். மேற்பார்வை பொதுச்சுகாதார பரிசோதகர் தொகுத்து வழங்கிய இந்நிகழ்வின் முடிவுரையை பொதுச்சுகாதார பரிசோதகர் கலந்தர்ஷா ஜெமீல் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஏப்ரல் 25இல் வடக்கு, கிழக்கு தழுவிய ரீதியில் முழுமையான நிர்வாக முடக்கல்



எதிர்வரும் 25ஆம் திகதி வடக்கு, கிழக்கு தழுவிய ரீதியில் முழுமையான நிர்வாக முடக்கல் போராட்டத்தை முன்னெடுப்பதற்கு தமிழ் கட்சிகள் அழைப்பு விடுத்துள்ளன. வடக்கில், கிழக்கில் தமிழர் நிலங்களில் ஆக்கிரமிப்பு, பௌத்தமயமாக்கல் மற்றும் பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தை நிறைவேற்ற முன்னெடுக்கப்படும் முயற்சிகளுக்கு எதிராகவும் இந்த நிர்வாக முடக்கல் போராட்டத்தை முன்னெடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தமிழ் கட்சிகளுக்கிடையில் யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலில் குறித்த தீர்மானம் எட்டப்பட்டுள்ளது. இந்த சந்திப்பில், இலங்கை தமிழரசு கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா, புளொட் அமைப்பின் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன், ரெலோ அமைப்பின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன், ஜனநாயக போராளிகள் கட்சியினர் மற்றும் தமிழ் தேசிய கட்சியினரும் பங்கேற்றனர்.

எதிர்வரும் 25ஆம் திகதி பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தை அரசாங்கம் நாடாளுமன்றில் முன்வைக்கவுள்ளது. இதனால், அன்றைய தினத்தில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் முழுமையான நிர்வாக முடக்கல் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

## ஏப்ரல் 21 அமைதி போராட்டம் - கத்தோலிக்க திருச்சபை



இலங்கையில் உள்ள கத்தோலிக்க திருச்சபை உயிர்த்த ஞாயிறு பயங்கரவாத தாக்குதலின் 4 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு ஏப்ரல் 21 ஆம் திகதி மனித சங்கிலி போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளது. இந்த போராட்டத்தில் இணைவதற்கு, தமது பிரதேச தேவாலயங்களில் ஒன்று கூடுமாறு அனைத்து பொதுமக்களையும் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் வலியுறுத்தியுள்ளார்.

இன,மதமற்றும்அரசியல் கட்சிவேறுபாடுகளைப்பொருட்படுத்தாமல், அனைத்து பொது மக்களும் இதில் இணைய வேண்டும் என்று அவர் கோரியுள்ளார். உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்கவும், சுதந்திரத்தின் கரங்களை வலுப்படுத்தவும் இந்த போராட்டம் அமையவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

தற்போதைய ஜனாதிபதியும் கூட இந்த விடயத்தில் அக்கறை கொண்டிருப்பதை காணமுடியவில்லை என்றும் கர்தினால் குற்றம் சுமத்தியுளளார். எனவே ஏப்ரல் 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் தேவாலயத்தில் இருந்து நீர்கொழும்பு, கடுவாப்பிட்டி புனித செபஸ்தியார் தேவாலயம் வரையில் அமைதி போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாக பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் குறிப்பிட்டுள்ளார்.

## உளவு செயற்கைகோளை ஏவும் வடகொரியா



வடகொரியா-தென் கொரியா நாடுகள் இடையே நீண்ட காலமாக இருந்து வரும் மோதலால் கொரிய தீப கற்பத்தில் பதற்றம் நீடித்து வருகிறது. இதில் வடகொரியா அடிக்கடி ஏவுகணை சோதனை நடத்தி வருகிறது. குறிப்பாக கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணை. அணு ஆயுதம் சுமந்து செல்லும் திறன் கொண்ட ஏவுகணைகளை சோதனை செய்கிறது. தென்கொரியா-அமெரிக்கா இணைந்து போர் பயிற்சி நடத்துவதற்கு மிரட்டல் விடுக்கும் வகையில் ஏவுகணை சோதனையை நடத்துகிறது.

இந்த நிலையில் வட கொரியா தனது முதல் ராணுவ உளவு செயற்கைகோளை விண்ணில் ஏவ உள்ளது. இது தொடர்பாக வடகொரிய அரசு ஊடகம் வெளியிட்ட செய்தியில், "வடகொரியா தனது முதல் ராணுவ உளவு செயற்கைகோளை உருவாக்கி முடித்துள்ளதாகவும் திட்டமிட்டபடி அதை ஏவுவதற்கு அதிகாரிகளுக்கு அதிபர் கிம் ஜாங் உன் உத்தரவிட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளது. வடகொரியாவின் விண்வெளி நிறுவனத்திற்கு அதிபர் கிம் ஜாங் உன் சென்று ஆய்வு நடத்தினார். பின்னர் அவர் அதிகாரிகளுடன் ஆலோசனையில் ஈடுபட்டார். அப்போது அமெரிக்கா தலைமையிலான பாதுகாப்பு அச்சுறுத்தல்களை எதிர்கொள்ளும் வகையில் விண்வெளி அடிப்படையிலான கண்காணிப்பு அமைப்பை பெறுவது மிகவும் முக்கியமானது என்று வலியுறுத்தினார்.

மேலும் உளவு தகவல்களை சேகரிக்கும் திறனை உறுதியாக நிலைநிறுத்த வடகொரியா பல செயற்கைக்கோள்களை ஏவ வேண்டும். அமெரிக்காவும், தென்கொரியாவும் தங்கள் கூட்டணியை வலுப்படுத்தும் பெயரில் விரோத ராணுவ பிரசாரங்களை விரிவுபடுத்துகின்றன. விமானம் தாங்கி கப்பல்கள், அணுசக்தி திறன் கொண்ட ஆயுதங்கள் போன்றவற்றை நிலைநிறுத்துவதன் மூலம் தென்கொரியாவை ஆக்கிரமிப்புக்கான மேம்பட்ட தளமாக அமெரிக்கா மாற்றியுள்ளது என்றார். சமீபத்தில் அமெரிக்கா, தென்கொரியா, ஜப்பான் ஆகிய நாடுகள் இணைந்து முத்தரப்பு கூட்டு போர் பயிற்சியை தொடங்கிய நிலையில் வடகொரியா தனது முதல் ராணுவ உளவு செயற்கைகோளை ஏவ உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## இலங்கையின் நகரமயமாக்கல் 45% ஆக அதிகரிப்பு



குறைந்த மட்டத்தில் இருந்த இலங்கையின் நகரமயமாக்கல் 2012 - 2022 பத்து வருட காலப்பகுதியில் 45% ஆக அதிகரித்துள்ளதாக அண்மைய கணக்கெடுப்பில் தெரியவந்துள்ளது. நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவின் பணிப்புரையின் பேரில் தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களத்தினால் இந்த கணக்கெடுப்பு நடத்தப்பட்டுள்ளது.


அதன்படி, நகர மற்றும் கிராம திட்டமிடல் சட்டத்தின்படி, தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைய இந்த கணக்கெடுப்பு நடத்தப்பட்டதாக அதன் பணிப்பாளர் நாயகம் காமினி ஹேவகே தெரிவித்துள்ளார். இலங்கையின் நகரமயமாதல் தொடர்பில் கடந்த 2012 ஆம் ஆண்டு கணக்கெடுப்பு நடத்தப்பட்டது. கணக்கெடுப்பின்படி, நாட்டின் நகரமயமாக்கல் 18% ஆகும்.

மக்கள் தொகை அடர்த்தி, வீடுகள், 10 கி.மீ.க்குள் அமைந்துள்ள பல்பொருள் அங்காடிகள், துணிக்கடைகள், பெட்ரோல் நிலையங்கள், வங்கிகள், தனியார் பள்ளிகள் மற்றும் தனியார் மருத்துவமனைகள், குறிப்பிட்ட உள்ளூராட்சி மன்றத்தின் கிராம அதிகாரிகளின் எல்லைக்குள் அமைந்துள்ள குடியிருப்புகளின் எண்ணிக்கை, வாடகை மற்றும் குத்தகை அடிப்படையில் வழங்கப்படும் வீடுகள், நகரமயமாக்கல் உள்ளூராட்சி அமைப்புகளால் சேகரிக்கப்படும் கழிவுகளை முறையாக அகற்றுதல், உள்ளூராட்சி மன்ற பகுதியில் உள்ள விவசாயம் அல்லாத தொழிலாளர்களின் எண்ணிக்கை போன்ற அளவுகோல்களின் அடிப்படையில் ஒரு பகுதி அளவிடப்படுகிறது.

அதன் படி கொழும்பு மாவட்டத்தில் தற்போதுள்ள ஹோமாகம மற்றும் கொலன்னாவ ஆகிய இரண்டு உள்ளூராட்சி சபைகளும் கம்பஹா மாவட்டத்தில் உள்ள அனைத்து உள்ளூராட்சி சபைகளும் வேகமாக நகரமயமாகியுள்ளதாக கணக்கெடுப்பின் மூலம் தெரியவந்துள்ளது என்று தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் காமினி ஹேவகே தெரிவித்துள்ளார். மேலும் நாட்டின் மற்ற பகுதிகளும் வேகமாக நகரமயமாகி வருகின்றன.

இந்த கணக்கெடுப்பின் முடிவுகள் எதிர்காலத்தில் அமைச்சரவை பத்திரத்தில் அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவினால் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்படும். அமைச்சரவையின் தீர்மானத்தின் அடிப்படையில் மேலதிக பணிகள் மேற்கொள்ளப்படும் என தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் காமினி ஹேவகே மேலும் தெரிவித்தார். ஒரு நாட்டின் சமூக-பொருளாதார வளர்ச்சி நகரமயமாக்கல் மூலம் அளவிடப்படுகிறது. 2012 க்கு முன், நாடு நகரமயமாக்கலில் மெதுவான வளர்ச்சியைக் காட்டியது. ஆனால் 2010 களின் தொடக்கத்தில், நாட்டின் நகரமயமாக்கல் மின்சாரம், போக்குவரத்து, தகவல் தொடர்பு, சுகாதாரம் மற்றும் கல்வித் துறைகளின் வளர்ச்சி மற்றும் தொழில்கள் மற்றும் வர்த்தகத்தின் விரிவாக்கத்துடன் துரிதப்படுத்தப்பட்டது.

## லீட்ஸ் யுனைடெட்டை வீழ்த்தியது லிவர்பூல்



இங்கிலாந்தின் பிரீமியர் லீக் கால்பந்து போட்டியில் லிவர்பூல் 6 - 1 என்ற கோல் கணக்கில் லீட்ஸ் யுனைடெட் அணியை செவ்வாய்க்கிழமை சாய்த்தது. இப்போட்டியில் கடைசியாக கடந்த மார்ச் 5 ஆம் திகதி மான்செஸ்டர் யுனைடெட்ட அணியை 7 - 0 என்ற கோல் கணக்கில் வீழ்த்திய பிறகு இதுவரை 5 ஆட்டங்களில் விளையாடிய லிவர்பூல், அதில் எதிலுமே வெற்றி காணவில்லை. அவற்றில் 3 தோல்வி, 2 டிராக்களை பதிவு செய்திருந்த லிவர்பூல் அணிக்கு இதுவே முதல் வெற்றியாகும்.

இந்த ஆட்டத்தில் அந்த அணிக்காக கோடி கப்கோ (35'), முகமது சலா (39', 64'), டியோகோ ஜோடா (52', 73'), டார்வின் நுனெஸ் (90') ஆகியோர் கோலடித்தனர். லீட்ஸ் யுனைடெட்டுக்காக லூயிஸ் சினிஸ்டெரா (47') ஸ்கோர் செய்தார். புள்ளிகள் பட்டியலில் லிவர்பூல் இத்துடன் 30 ஆட்டங்களில் 13 வெற்றிகளுடன் 8-ஆவது இடத்தில் இருக்க, லீட்ஸ் யுனைடெட் 31 ஆட்டங்களில் 7 வெற்றிகளுடன் 16 ஆவது இடத்தில் உள்ளது. ஸ்பெயினில் நடைபெறும் லா லிகா கால்பந்து போட்டியில் மால்லோர்கா 1 - 0 என்ற கோல் கணக்கில் செல்டா விகோவை வென்றது. அந்த அணிக்காக அமத் டியாயே (21') ஸ்கோர் செய்தார். புள்ளிகள் பட்டியலில் தற்போது மல்லோர்கா 29 ஆட்டங்களில் 10 வெற்றிகளுடன் 11 ஆவது இடத்திலும், செல்டா விகோ 9 வெற்றிகளுடன் 12 ஆவது இடத்திலும் உள்ளன.

இப்போட்டியில் இதுவரை லிட்ஸ் யுனைடெட்டுக்கு எதிராக விளையாடிய அணிகள் மொத்தமாக 60 கோல்கள் அடித்துள்ளன. வேறெந்த அணிக்கு எதிராகவும் இத்தனை கோல்கள் அடிக்கப்படவில்லை. முந்தைய ஆட்டத்தில் கிரிஸ்டல் பேலஸூடன் 1 - 5 என்ற கோல் கணக்கில் தோற்ற லீட்ஸ் யுனெடெட், இந்த ஆட்டத்தில் 6 - 1 என தோற்றிருக்கிறது. போட்டி வரலாற்றில் இவ்வாறு அடுத்தடுத்த ஆட்டங்களில் 5 கோல்கள் விட்டுக் கொடுத்து அந்த அணி தோல்வி கண்டது இதுவே முதல் முறையாகும். இந்த ஆட்டத்தின் மூலம் பிரீமியர் லீக் போட்டியில் அந்நிய மண்ணில் 250 வெற்றிகளை பதிவு செய்த 4 ஆவது அணியாகியிருக்கிறது லிவர்பூல். அந்த அணி தனது 592 ஆவது ஆட்டத்தில் இந்த மைல் கல்லை எட்டியிருக்கிறது. முன்னதாக மான்செஸ்டர் யுனைடெட் (470 ஆட்டங்கள்), செல்சி (554), ஆர்செனல் (573) அணிகள் அந்த மைல் கல்லை எட்டியுள்ளன.